**முக்கிய வார்த்தைகள்:**
பல வகையான
வித்தியாசமான
சிறந்த
மதிப்பீடு / விழுமியம்

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**17 ஜுலை 2026 / 02 ஸஃபர் ஹிஜிரி 1448**

## பன்முகத்தன்மையும், சிறப்பை நோக்கியப் பயணத்தில் ஒன்றிணைந்து செயல்படுதலும்

ٱلْحَمْدُ لِلّٰهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللّٰهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى: يَاأَيُّهَا ٱلَّذِينَ آمَنُوا ٱتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது தக்வா [பக்தியை] உறுதியாக்கிக் கொள்வோமாக! இம்மையிலும் மறுமையிலும் அல்லாஹ்வின் கிருபையையும், அவன் நமக்கு வழங்கும் மன்னிப்பையும் அவனது திருப்தியையும் பெற்ற அவனது நல்லடியார்களில் ஒருவராக நாமும் ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

பரந்து விரிந்துள்ள வானங்களையும், அழகான பூமியையும், **வித்தியாசமானத்** தோற்றங்களையும், மொழிகளையும், கலாச்சாரங்களை யும் கொண்டுள்ள **பன்முகத்தன்மை** மிக்க மக்களையும் நாம் காணும் போதெல்லாம், நம்மைச் சுற்றிலும் **பன்முகத்தன்மையை** ஏற்படுத்தியுள்ள வல்லமைமிக்க அல்லாஹ்வின் மகிமையை, அவை நமக்கு நினைவூட்டுகின்றன. திருக்குர்ஆனின் "அர்-ரூம்" எனும் அத்தியாயத்தின் 22-வது வசனத்தில் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான்:

وَمِنْ ءَايَٰتِهِۦ خَلْقُ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ وَٱخْتِلَٰفُ أَلْسِنَتِكُمْ وَأَلْوَٰنِكُمْ ۚ
إِنَّ فِى ذَٰلِكَ لَءَايَٰتٍ لِّلْعَٰلِمِينَ ٢٢

பொருள்: "வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதும், உங்களுடைய மொழிகளும் நிறங்களும் **வேறுபட்டிருப்பதும்** அவனுடைய [அல்லாஹ்வுடைய] அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் கற்றறிந்தோருக்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன"

அல்லாஹ், மனிதகுலத்தின் **பன்முகத்தன்மையை,** வானங்கள் மற்றும் பூமியின் படைப்புடன் ஒப்பிட்டு, தனது மகத்தான அத்தாட்சிகளில் ஒன்றாக அதனைக் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். இவ்விஷயம், இனம், மொழி, கலாச்சார **வேறுபாடுகள்** ஆகியவற்றைச் சந்தேகக் கண்ணுடன் காண்பதோ, மோதல்கள் மற்றும் பிளவுகளுக்குக் காரணமாக அவற்றைப் பயன்படுத்துவதோ கூடாது என நமக்குக் கற்பிக்கின்றது. மாறாக, அவை அல்லாஹ்வின் தெய்வீக ஒழுங்கின் ஒரு பகுதியாக உள்ளது; நம்மைப் படைத்தவனின் மகத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள நம்மை அழைப்பதாகவும் உள்ளது.

ஒரு ஓரிறை நம்பிக்கையாளர், அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள **பன்முகத்தன்மையை** ஏற்றுக் கொள்வதானது, அவர் தனது ஓரிறை

நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்கான அடையாளமாக உள்ளது. ஒவ்வொரு மனிதரையும் அல்லாஹ்வின் படைப்பாகக் கருதி, அவரைக் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நாம் காணும் போது நமது பேச்சில் அதிகக் கவனத்துடனும் நமது தீர்ப்புகளில் நேர்மையுடனும் மற்றவர்களுடன் பழகும் விதத்தில் அதிக மரியாதையுடனும் நாம் நடந்து கொள்வோம்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

மக்கள் **பல்வேறு** பின்னணிகளுடனும் **பன்முகத்தன்மையுடனும்** காணப்படுகிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளுமாறு மட்டும் இஸ்லாம் நமக்குப் போதிக்கவில்லை; மாறாக, அத்துடன், சமூகத்தை மேம்படுத்தி, அதனைப் பலப்படுத்தும் மதிப்பீடுகள் மற்றும் **விழுமியங்களின்** மூலம் அந்தப் **பன்முகத்தன்மையை** எவ்வாறு கையாள்வது என்பதையும் இஸ்லாம் நமக்குக் கற்றுத் தருகிறது. ஒருவரது உண்மையானக் கண்ணியம், அவரது பரம்பரையை வைத்தோ அல்லது இனத்தாலோ தீர்மானிக்கப்படுவதில்லை; மாறாக, அல்லாஹ்வைப் பற்றிய அவரது சிந்தனை மற்றும் உணர்வாலேயேத் தீர்மாணிக்கப்படுகிறது எனத் திருக்குர்ஆன் நமக்கு நினைவூட்டுகிறது.

இஸ்லாமிய நாகரீகத்தின் வரலாறு, இவ்விஷயத்தில் நமக்குப் பல்வேறு பாடங்களை வழங்குகிறது. இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களிடமிருந்து இது தொடங்குகிறது. அவர்களின் தோழர்களாகிய ஸஹாபாக்கள் **பல்வேறு** பின்னணிகளிலிருந்து வந்திருந்த போதிலும் அவர்களின் தனித்துவமான ஆற்றல்களையும் நிபுணத்துவத்தையும் **வெவ்வேறு** துறைகளில் அங்கீகரித்து, அவற்றைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

பின்னர், அப்பாஸிய்யாக்களின் ஆட்சி காலத்தில் பாக்தாத் நகரம் அறிவு மற்றும் கல்வி விஷயத்தில் உலகின் முன்னணி மையங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. தத்துவம், கணிதம், மருத்துவம் மற்றும் வானியல் போன்ற துறைகளில் கல்வியறியைப் பெறவும், மொழிபெயர்க்கவும், மேம்படுத்தவும் பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த அறிஞர்களும் நிபுணத்துவம்

மிக்கவர்களும் ஒன்றிணைந்து பணியாற்றினர். அவர்களின் முயற்சிகள், இன்றளவும் நமக்குப் பயனளித்து வரும் கண்டுபிடிப்புகளையும் படைப்புகளையும் உருவாக்கின.

நிச்சயமாக, இந்தச் **சிறப்பானது பன்முகத்தன்மை** நிலவியதால் மட்டும் ஏற்படவில்லை; மாறாக, அறிவைப் போற்றுதல், நம்பிக்கையைக் காப்பாற்றுதல், மற்றும் சமூகத்திற்குப் பயனளிக்கப் பாடுபடுதல் ஆகிய நமது ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையால் ஏற்படுத்தப்பட்ட **விழுமியங்கள்** மற்றும் மதிப்பீடுகளால் **பன்முகத்தன்மை** வழிகாட்டப்பட்டதால் தான் ஏற்பட்டது. இது, இன்று நமக்கு ஒரு முக்கியமானப் பாடத்தை அளிக்கிறது. அதுதான், நன்மை தரும் விஷயங்களை நாம் அடைவதற்காக, ஒன்றிணைந்து செயல்பட முற்படும் போது மட்டுமே **பன்முகத்தன்மை** ஒரு அருளாக அமைகிறது என்பதாகும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

இன்று நாம் அனுபவிக்கும் **பன்முகத்தன்மையை**, நாளை நாம் அடைய விரும்பும் மேன்மையாக மாற்றுவதற்கான இரண்டு நடைமுறை வழிமுறைகளை இன்றைய ”குத்பா” பிரசங்கம் உங்களுக்கு எடுத்துரைக்க உள்ளது.

**முதலாவதாக, பன்முகத்தன்மையை, வெற்றியை அடைவதற்கான வாய்ப்பாகக் காண்பது**.

ஒவ்வொரு தனிநபரும் ஒரு பரந்த சமூகத்தின் அங்கமாக இருக்கின்றார்; மேலும் ஒவ்வொருவரும் **வெவ்வேறு** திறமைகள், அனுபவங்கள் மற்றும் ஆற்றல்களைக் கொண்டுள்ளனர். நம்மில் சிலர், கல்வியைக் கற்றுக் கொடுக்கின்றோம்; சிலர் சிகிச்சையளிக்கின்றோம்; சிலர் வணிகம், வியாபாரம் செய்கிறோம்; சிலர் தொழில் நுட்ப நிபுணத்துவத்தை அளிக்கின்றோம்; மற்றவர்களோ அறிவைத் தேடுவதிலும் அதனை மேம்படுத்துவதிலும் தங்களை அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். இந்தப் **பன்முகத்தன்மை** அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடையாகும்; இது பொது நன்மைக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

எனவே, நமது **வேறுபாடுகளோ** அல்லது **மாறுபட்ட** பின்னணிகளோ பரஸ்பர புரிதலுக்கோ அல்லது கூட்டு முன்னேற்றத்திற்கோ தடைகளாக ஆகுவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. மாறாக, இஸ்லாமிய நாகரீகம் அதன் பொற்காலத்தில் போற்றப்பட்டதைப் போன்று, நாமும் ஒருவருக்கொருவர் கற்றுக் கொள்வதற்கும் ஒருவருக்கொருவர் தமது ஆற்றல்களைப் பூர்த்தி செய்வதற்கும் தனது நாகரீகத்தையும் சாதனைகளையும் போற்றி, அதனைப் பாதுகாக்கும் ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்குமான வாய்ப்பாகப் பன்முகத்தன்மையைக் காண வேண்டும்.

**இரண்டாவதாக, ஒத்துழைப்புச் செய்து கொள்வதன் மூலம் கருணைச் சிந்தனையைப் பரப்புதல்**

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள், படைப்புகள் அனைத்திற்கும் அருளாக அனுப்பப்படவில்லையா? அவ்வாறே, ஒவ்வொரு முஸ்லிமும் தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு கருணையின் ஊற்றாகவும் மூலமாகவும் இருக்க முயல வேண்டும். அந்தக் கருணையானது, நமது பணியில் நாம் நேர்மையாக இருப்பது, அறிவைத் தேடுவதில் அர்ப்பணிப்பது, பிறருடன் பழகும் விதத்தில் நியாயமாக நடந்து கொள்வது மற்றும் அனைவருக்கும் நன்மை பயக்கும் விஷயங்களில் ஒன்றிணைந்து செயல்படுவது ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!

நல்லுறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும், சமூகத்திற்குக் பங்களிப்பதற்கும், தத்தமது துறைகளில் **சிறந்து விளங்குவதற்காகப்** பாடுபடுவதற்கும் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியும் அல்லாஹ்வுக்குச் செய்யப்படும் வணக்கமாகக் கருத வேண்டும்; இந்த சிறந்த எண்ணத்தைப் புதுப்பித்து, செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, **பன்முகத்தன்மையைக்** கையாள்வதில் நமக்கு ஞானத்தை வழங்குவானாக! ஒருவருக்கொருவர் மதிக்கும் வகையில் நம் உள்ளங்களைத் திறப்பானாக! மனிதகுலத்திற்குத் தொடர்ந்து

நன்மை செய்யும் அவனது அடியார்களில் ஒருவராக நம்மை ஆக்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَموَاتِ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ

يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.